**களுத்துறை பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

களுத்துறை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் களுத்துறை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 15.8 இன் பிரகாரம் மீளச் செலுத்த வேண்டிய கடன் மீதியில் எதிர்வரும் ஆண்டிற்கான கடன் தவணைப் பணம் நடைமுறைப் பொறுப்பாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காணப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 643,739 பெறுமதி நடைமுறைச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | கணக்குகள் தயாரிக்கும் போது அவ்வாறு மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறுகியகால கடன் தவணைப் பணத்தின் பெறுமதி நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களஞ்சிய இருப்பு பதிவேட்டில் 11 கணக்கு விடயங்களுக்குரிய இறுதி இருப்பு ரூபா 152,866 ஆக இருந்த போதும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 126,843 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் இறுதி இருப்பு ரூபா 26,023 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதி கணக்கில் சரிசெய்யப்படும். | ஆரம்ப இருப்புக்களின் சரியான பெறுமதி இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரல் வேண்டும். |
| (ஆ) | 02 கணக்கு விடயங்களுக்குரிய மின்சாரம் மற்றும் வேலைகளின் ஆரம்ப இருப்பு மீதி ரூபா 419,175 ஆக இருந்த போதும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 431,505 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆரம்ப இருப்பு ரூபா 12,330 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஆரம்ப இருப்புக்களின் சரியான பெறுமதி இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரல் வேண்டும். |
| (இ) | 03 களஞ்சிய கணக்கு விடயங்களுக்குரிய விநியோகித்தல் பெறுமதி ரூபா 114,775 ஆக இருந்த போதும், அது ரூபா 124,830 ஆக காண்பிக்கப்பட்டமையால் வருமான கூற்றின் மிகை ரூபா 10,055 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இருப்புக்கள் விநியோகித்தலின் சரியான பெறுமதி கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் சபை நிதிஏற்பாட்டின் கீழ் வீதிகள் மற்றும் ஏனைய நிர்மாண செயற்திட்டங்களில் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி கொடுப்பனவு அறிக்கையின் பிரகாரம் கிரயத்தை மூலதனமாக்கல் மற்றும் கடன்கொடுத்தோராக ஒதுக்குவதற்குப் பதிலாக 28 செயற்திட்டங்களின் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 16,659,588 | 28 செயற்திட்டங்களில் 27 செயற்திட்டங்கள் 2020 திசெம்பர் 31 இல் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மீதிகள் சீராக்கப்பட்டு 2021 இன் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | வேலை பூர்த்தி அறிக்கையின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதனமாக்குதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதனமாக்கப்பட்டு கடன்கொடுத்தோராக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | நிர்மாண மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல் ரூபா 251,000 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட போதிலும் அது கடன்கொடுத்தோராக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | சரியான கடன்கொடுத்தோர் மீதி கணக்குகளில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | சபை நிதியேற்பாட்டின் கீழ் அமுல்படுத்தப்பட்ட 05 செயற்திட்டங்களின் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட வேண்டிய ரூபா 2,606,137 இற்கு பதிலாக ரூபா 2,715,000 கணக்கீடு செய்யப்பட்டமையால் கடன்கொடுத்தோர் ரூபா 108,863 மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சரியான கடன்கொடுத்தோர் மீதி இறுதிக் கணக்குகளில் சீராக்கப்படல் வேண்டும். |
| (எ) | ஏலமிடப்பட்ட 116 பொருள் வகைகளின் கிரயத்தை இனங்கண்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிரயத்தை கண்டறிவதற்கான மூலப் பதிவேடுகள் இதுவரை கிடைத்திருக்கவில்லை. எதிர்காலத்தில் கிரயத்தை கண்டறிந்து புத்தகங்களிலிருந்து அகற்றப்படும். | ஏலமிடலின் பின்னர் அவற்றின் கிரயம் புத்தகங்களிலிருந்து அகற்றப்படல் வேண்டும். |
| (ஏ) | புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்த பெறுமதி ரூபா 3,503,097 ஆன அலுவலக உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். | நன்கொடையான பெறுவனவுகள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 242,828 ஊழியர் கடன் பெறவேண்டிய முற்பணமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | ஊழியர் கடன் பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 764,990 ஆக இருந்த போதும், அது ரூபா 858,959 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் வட்டி வருமானம் | - மேற்படி - | ஆண்டின் வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 93,969 ஆக அதிகரித்து காண்பிக்கப்படுகின்றது. | | |
| (ஓ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலையான வைப்பு மீதி ரூபா 9,555,176 ஆக இருந்த போதும் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,030,284 ஆக ரூபா 475,108 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | சொத்துக்களின் சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய உறுப்பினர் படி ரூபா 675,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பெறுமதிக்கும் நேரொத்த அறிக்கைகளின் பெறுமதிக்கும் இடையே ரூபா 9,668,585 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளை இனங்கண்டு எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்களின் மீதியும் பட்டோலைகளின் மீதியும் சமமாக இருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 66,631,388 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 58,581,142 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 06 செயற்திட்டங்களுக்காக 2019 ஆம் ஆண்டிலும், அதற்கு முன்னைய ஆண்டுகளில் இருந்தும் கிடைக்க வேண்டிய ரூபா 1,506,191 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | களுத்துறை பிரதேச செயலகம் மற்றும் உள்ளுராட்சித் திணைக்களம் என்பவற்றிலிருந்து பணம் கிடைத்திருக்கவில்லை. | செயற் திட்டத்திற்காக கிடைக்க வேண்டிய பணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |